Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 74 | செவ்வாய்க்கிழமை Tuesday | 13.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# நமக்குள் எந்தப் பிளவும் ஏற்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது

## முதலமைச்சர் ஸ்டாலின் பேச்சு



சென்னை: நமக்குள் எந்தப்பிளவும்ஏற்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது என்றும், தமிழர்கள் கனவு கண்டால் அது நிறைவேறும் என்றும் அயலக தமிழகர் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.நாட்டிலேயே அதிக அளவு அகழாய்வு நடைபெற்ற மாநிலம் தமிழ்நாடு. தி.மு.க. அரசு ஒரு கட்சியின் அரசு அல்ல, இனத்தின் அரசு என்றும் vங்கு வாழ்ந்தாலும் தமிழர்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சென்னை நந்தம்பாக்கத்தில் அயலகத் தமிழர் விழா நடைபெற்று வருகிறது. இன்று 2-வது நாளாக நடைபெறும் அயலகத் தமிழர் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். நிகழ்ச்சியில் அவர்பேசியதாவது:-

வான்புகழ் வள்ளுவர் பிறந்த மண்ணுக்கு சொந்தக்காரர்கள் நாம்... வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும். *மொழிப்பற்று, இனப்பற்று நமக்கு உண்டு,அது மொழிவெறி,இனவெறியாக மாறாது என்றார். நாடுகளும், கடல்ளும் பிரித்தாலும் மொழியும், இனமும் நம்மை உணர்வால் இணைக்கிறது.

திராவிட மாடல் அரசு அமைந்ததும் அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டது. இதன்மூலம், வெளிநாடுகளில் வசிக்கும் நமது சொந்தங்கள் இணைக்கப்பட்டு உள்ளனர். வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் வாழ்க்கை தேடிச் சென்றவர்கள் இல்லை, அந்த நாடுகளை வளப்படுத்த சென்றவர்கள். வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் தமிழ்நாட்டை அயலகத் தமிழர்கள் மறக்கவில்லை. நம்மை யாராலும் எதனாலும் பிரிக்கமுடியாது. பல்லாயிரம் ஆண்டு கால சொந்தம், இன்னும் பல ஆண்டுகள் தொடரும் சொந்தம்.

மொழி உரிமைக்காக தனது உயிரைத் தியாகம் செய்தது திமுக,நமக்குள் எந்த பிளவுகளும் ஏற்பட அனுமதிக்காதீர்கள். ஒரு தாய் மக்களாய் வாழ்வோம். உலகின் பல்வேறு நாடுகளில் தமிழர்களாகிய நீங்களும், உங்கள் குடும்பத்தார்களும் பல்வேறு முக்கிய பொறுப்புகளில் இருப்பதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். நாம் அனைவரும், யாராலும் பிரிக்கமுடியாததமிழின சொந்தங்கள். நாடுகளும் கடல்களும் நம்மைப் பிரித்தாலும், மொழியும் இனமும் நம்மை உணர்வால் இணைக்கிறது.

கீழடி கண்டுப்பிடிப்புகள் மூலம் நான்காயிரம் ஆண்டு பழமையான வரலாற்றுக்கு சொந்தக்காரர்கள் நாம் என்பது உறுதியாகியுள்ளது. கீழடியில் நெல்மணிகள் பயிரிடப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. 4,000 ஆண்டுகள் பழமையான வரலாற்றுக்கு சொந்தக்காரர்கள் நாம் என்பது உறுதியாகி இருக்கிறது. அதனால் நமக்குள் எந்தப் பிளவும் ஏற்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது. நாட்டிலேயே அதிகஅளவு அகழாய்வு நடைபெற்ற மாநிலம் தமிழ்நாடு என்றவர், வாழ்வதும், வளர்வதும் தமிழனும், தமிழுமாய் இருக்க வேண்டும் என்பதே நோக்கம். மொழி சிதைந்தால் இனம் சிதையும்.இனம் சிதைந்தால் பண்பாடு சிதையும். பண்பாடு சிதைந்தால் அடையாளம் போய்விடும், அடையாளம் போய்விட்டால் தமிழர்கள் எனச் சொல்லும் தகுதியை இழந்துவிடுவோம்" என்றார்.

இலங்கையில் அறிமுகமாகும் புதிய அரசியலமைப்பு சட்டத்தால் தமிழர்களின் உரிமை பாதிக்கக்கூடாது என வலிறுத்தி பிரதமருக்கு கடிதம் எழுதினேன். *மொழி உரிமை காக்க தங்கள் உயிரை தந்தவர்களை கொண்ட இயக்கம் தி.மு.க. அரசு ஒரு கட்சியின் அரசு அல்ல, இனத்தின் அரச எங்கு வாழ்ந்தாலும் தமிழர்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்றார்.

மேலும், தி.மு.க. தமிழர்கள் கனவு கண்டால் அது நிறைவேறும். அதனால்தான் 2030-ம் ஆண்டை மனதில் வைத்து உங்க கனவ சொல்லுங்க திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூறினார்.

# “தமிழகம் கொலைக் களமாக மாறி வருகிறது”

## சென்னை கீழ்ப்பாக்கம் சம்பவத்துக்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம்



சென்னை: "பேருந்து நிலையங்கள், காவலர் குடியிருப்புகள், அரசு மருத்துவமனைகள் என கொலைகள் நடைபெறாத இடங்களே இல்லை என்று சொல்லும் அளவுக்கு கொலைக் களமாகவும்,ரவுடிகளின் தலைமையிடமாகவும் தமிழகம் மாறி வருகிறது" என கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் நடந்த கொலை சம்பவம் குறித்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், தமிழகத்தின் தலைநகர் சென்னையில் நாள்தோறும் நூற்றுக்கணக்கான நோயாளிகளும், பொதுமக்களும் வந்து செல்லும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்குள் புகுந்து கர்ப்பிணி பெண்கள் இருக்கும் மகப்பேறு மருத்துவ பிரிவின் அருகில் ஆதி என்பவரை அடையாளம் தெரியாத கும்பல் சரமாரியாக வெட்டி கொலை செய்துவிட்டு தப்பியோடியிருக்கிறது.

பொது மக்களின் உயிரை காக்கும் அரசு மருத்துவமனைகள் இந்த வெற்று விளம்பர மாடல் அரசில், உயிரை பறிக்கும் களமாகவும், கஞ்சா செடி வளர்க்கும் இடமாகவும் மாறியிருப்பது மிகுந்த வேதனைக்குரியது மட்டுமல்ல கண்டனத்துக்குரியது.

சட்டம் - ஒழுங்கை பேணிக்காக்கவேண்டிய காவல் துறையை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முதலமைச்சரோ,தமிழகம் அமைதிப்பூங்காவாக திகழ்கிறது என வழக்கம் போலபொய்யானஅறிக்கையை படித்துவிட்டு போலி நாடகத்தை அரங்கேற்றி கொண்டிருக்கிறார்.

பேருந்துநிலையங்கள், காவலர் குடியிருப்புகள், அரசு மருத்துவமனைகள் என கொலைகள் நடைபெறாத இடங்களே இல்லை என்று சொல்லும்அளவுக்குகொலைக் களமாகவும்,ரவுடிகளின் தலைமையிடமாகவும் தமிழகம் மாறிவருவதை அறியாமல், சிலம்பம் சுற்றுவதையும், விண்டேஜ் கார் ஓட்டுவதையும் ரீல்ஸ் எடுத்து பதிவிட்டு விளையாடும் ஒரு முதலமைச்சரை பெற்றிருப்பது தமிழக மக்களின் சாபக்கேடு.

தமிழககாவல்துறைக்கென நிரந்தர டிஜிபியை கூட நியமிக்க வக்கற்ற முதல்வராலும், தலைமையில்லாமல் சரியானபடி செயல்படாத காவல் துறையாலும் தமிழக மக்கள் இன்னும் என்னென்ன துயரங்களை சந்திக்க வேண்டியிருக்குமோ என்ற அச்சம் மக்களிடையே உருவாகியுள்ளது.

நான் ஏற்கனவே சொன்னது போல முதலமைச்சரின் கீழ் இயங்கும் விளம்பர அரசையும்,காவல்துறையையும் இனியும் நம்பி எந்தவித பயனும் இல்லை என்பதால், பொதுமக்களே அவரவர் உயிர் பாதுகாப்பை அவரவர்களே உறுதி செய்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்வதுடன், இன்னும் மூன்று மாதங்களில் இந்த கொடுமைகளுக்கு எல்லாம் முடிவு எட்டப்படும் எனவும் உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# ‘மக்கள் மயக்கமடைந்தபோதும் பேச்சை நிறுத்தாதது ஏன்?’

## த.வெ.க. தலைவர் விஜய்யிடம் சி.பி.ஐ. கேள்வி



புதுடெல்லி: மக்கள் மயக்கமடைந்து விழுந்தபோதும் ஏன் நீங்கள்பேச்சைநிறுத்தவில்லை?, எந்த உடனடி நடவடிக்கையையும் எடுக்காதது ஏன்? கூட்டத்துக்கு தாமதமாகவந்தது ஏன்?என்பன உள்பட பல்வேறு கேள்விகளை சிபிஐ அதிகாரிகள் விஜய்யிடம்எழுப்பி உள்ளனர். தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கடந்த ஆண்டு செப்.27ம் தேதி கரூரில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில்சிக்கி 41பேர் உயிரிழந்தனர், பலர் படுகாயமடைந்தனர். இது குறித்து வழக்குப்பதிவு செய்து சிபிஐ விசாரணை மேற்கொண்டு வருகிறது.

விசாரணையின் முக்கிய நடவடிக்கையாக, தவெக தலைவர் விஜய்யிடம் பல்வேறு கேள்விகளை எழுப்ப முடிவு செய்த சிபிஐ, அவரை இன்று விசாரணைக்கு நேரில் ஆஜராக சம்மன் அனுப்பி இருந்தது. அதன் அடிப்படையில், சென்னையில் இருந்து தனி விமானத்தில் விஜய் இன்று காலை டெல்லி சென்றார். பின்னர், சிபிஐ தலைமையகத்துக்குச் சென்று விசாரணையில் நேரில் ஆஜரானார்.

இந்த விசாரணையின்போது மூன்று முக்கிய கேள்விகளை சிபிஐ, விஜய்யிடம் எழுப்பியதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த கேள்விகள் கடுமையானவை மற்றும் முக்கியமானவை என சிபிஐ வட்டாரங்கள் தெரிவித்தன.

முதல் கேள்வியான, 'நீங்கள் ஒரு திறந்த வாகனத்தில் நின்று கொண்டிருந்தீர்கள், கூட்டத்தில் மக்கள் மயங்கி விழுவது தெளிவாகத் தெரிந்தும், நீங்கள் உங்கள் பேச்சைத் தொடர்ந்தது ஏன்?' எனக் கேட்கப்பட்டது.

இரண்டாவது கேள்வியில், 'சிலர் மயங்கி விழுந்தபோது, நீங்கள் கூட்டத்திற்குத் தண்ணீர் பாட்டில்களை விநியோகித்துக் கொண்டிருந்தீர்கள், அப்படியிருந்தும் இந்த விஷயத்தில் ஏன் எந்த உடனடி நடவடிக்கையும் எடுக்கவில்லை?' எனக் கேட்டனர்.

மூன்றாவது மற்றும் மிக முக்கியமான கேள்வியாக, 'நீங்கள் ஏன் சரியான நேரத்தில் கூட்ட இடத்திற்கு வரவில்லை? உங்கள் தாமதம் கூட்டத்தில் அமைதியின்மையையும் அழுத்தத்தையும் ஏற்படுத்தியது.

இது உங்கள் அரசியல் அதிகாரத்தைக் காட்டும்செயலா?' என கேட்கப்பட்டது.

கரூர் பேரணியின் ஏற்பாடுகள், திட்டமிடல், காவல்துறையுடனான ஒப்பந்தங்கள், கூட்டக் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் அவரிடம் கேள்விகள் எழுப்பப்பட்டு உள்ளன.

பேரணியை ஏற்பாடு செய்தல் மற்றும் நிர்வகிப்பதில் ஏற்பட்டதாகக் கூறப்படும் அலட்சியம் குறித்தும் விஜய்யிடம் சிபிஐ விசாரணை நடத்துகிறது. முக்கியமாக, தவெக பேரணிக்கு முன்பு கட்சித் தலைவர்களுடன் நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் பற்றி சிபிஐ அறிய விரும்புகிறது.

கரூர் நிகழ்வின் போது என்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டன? என்ன குறைபாடுகள் ஏற்பட்டன? என்பதை கண்டறிய சிபிஐ முயற்சிக்கிறது. பேரணியின்போதுகாவல்துறைக்கும் கட்சிக்கும் இடையே பேசப்பட்ட ஏற்பாடுகளும் சிபிஐயின் முக்கிய அம்சமாக உள்ளது. கூட்டக் கட்டுப்பாடு ஏன் முறையாகப் பின்பற்றப்படவில்லை? என்பது குறித்தும் சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது.

இவ்வளவு பெரிய கூட்டத்திற்குத் தண்ணீர், பாதுகாப்பு மற்றும் அவசரகால மேலாண்மைக்கான ஏற்பாடுகள் போதுமான அளவில் ஏன் செய்யப்படவில்லை என்பது குறித்தும் சிபிஐ விசாரணை நடத்துகிறது.

மேலும்,பேரணியின் செலவுகள், உள்கட்டமைப்பு, போக்குவரத்து, தன்னார்வலர்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஆவணங்களின் உண்மைத்தன்மையை ஆராய சிபிஐ திட்டமிட்டுள்ளது.

டெல்லி சிபிஐ தலைமை அலுவலகத்தில் விஜய்யிடம் மாலை 6.30 மணி வரை விசாரணை நடத்தப் பட்டது.

செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் சார்பில் பத்திரிகையாளர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழா



தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் சார்பில் பத்திரிகையாளர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழா மற்றும் ஒற்றுமை பொங்கல்விழா09.01.2026 அன்று சங்க தலைமை அலுவலகத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

பத்திரிகையாளர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்டது.

பத்திரிகையாளர்களின் ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கில் பொங்கலிட்டு பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

2026 ஆண்டிற்கான சங்க காலண்டர் வெளியிடப்பட்டது.

விழாவில் கலந்துக் கொண்ட 200க்கு மேற்பட்ட பத்திரிகையாளர்களுக்கு அரிசி, வெல்லம், கரும்பு, நெய், முந்திரி, திராட்சை ஏலக்காய், உள்ளிட்ட பொங்கல்பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது.

ஆண்டுதோறும் பத்திரிகையாளர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்குதல் மற்றும் ஒற்றுமை பொங்கல் விழா தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் சார்பில் கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சங்க நிர்வாகிகள் மூத்த பத்திரிகையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் உள்ளிட்ட ஏரளமான பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்துக் கொண்டனர்.

என்றும் பத்திரிகையாளர் நலனில்..
எஸ். சரவணன்
தலைவர் தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் 98400 35480



100 நாள் வேலை திட்ட பெயரை மாற்றி அமைத்த ஒன்றிய அரசை கண்டித்து சுடலூர் மேற்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் விருத்தாசலம் பாலக்கரையில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. கடலூர் மேற்கு மாவட்ட தலைவர் ராதாகிருஷ்ணன் எம்எல்ஏ தலைமை தாங்கினார். மாவட்ட பொருளாளர் ராஜன், நகர தலைவர் ரஞ்சித்குமார், மங்கலம்பேட்டை வேல்முருகன், இளைஞர் காங்கிரஸ் மாநில பொது செயலாளர் ஜெய்சங்கர், மாநில செயலாளர் அன்பரசு. ராமராஜன் முன்னிலை வகித்தனர். வட்டார தலைவர்கள் சாந்தகுமார், ராவணன், முருகானந்தம், பீட்டர் சாமி கண்ணு, ராமச்சந்தி ரன், சக்திவேல், பரமசிவம், சுரேஷ், கலைச்செல்வன், மணிகண்டன், மாவட்ட விவசாய பிரிவு தலைவர் ஜெய குரு. அன்புமணி, இந்திராநகர் நகர தலைவர் அற்புதராஜ்.இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் சாகுல், சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் சிராஜ்தீன், மகிளா காங்கிரஸ் லாவண்யா உள்பட கடலூர் மேற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் பலர் கலந்து கொண்டனர்.

# எஸ்.ஜி.எஸ். தொண்டு மருத்துவமனை ஸ்ரீ ல ஸ்ரீ தத்த விஜயானந்த தீர்த்த சுவாமிகள் பிறந்த நாள்; பல்நோக்கு இலவச மருத்துவ முகாம்



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகேபெரும்பேர்கண்டிகையில்

ஸ்ரீ விஜயானந்த தீர்த்த சுவாமிகள் பிறந்த நாள் முன்னிட்டு பல்நோக்கு இலவசமருத்துவமுகாம் நடைபெற்றது. மைசூர் அவதூததத்தபீடஇளைய பீடாதிபதி ஸ்ரீ ல ஸ்ரீ தத்த விஜயானந்த தீர்த்த சுவாமிகளின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை எஸ்.ஜி.எஸ். தொண்டு மருத்துவமனை, மாலோலன் கல்லூரி, மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பல் மருத்துவமனை, இணைந்து நடத்தும் பல்நோக்கு இலவசமருத்துவமுகாம் பெரும்பேர்கண்டிகை பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது.

இம்முகாமில் பெரும்பேர்கண்டிகை தொழுப்பேடு கடமலைபுத்தூர் எடையாளம் ஆத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 500 க்கும் மேற்பட்ட ஏராளமான பொதுமக்கள் பங்கு பெற்று பயன்பெற்றனர். இம் மருத்துவ முகாமிற்கான ஏற்பாடுகளை பெரும்பேர்கண்டிகை ஊராட்சி மன்ற தலைவர் சாவித்திரி சங்கர் செய்திருந்தார். சென்னை வேளச்சேரி எஸ்.ஜி.எஸ் ஆசிரம மருத்துவ குழு தலைவர் மருத்துவர் சிவா தலைமை வகித்தார். மேலும் இந்நிகழ்வில் கடமலைபுத்தூர் ஸ்ரீ கணபதி சச்சிதானந்தா அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் எம்.வெங்கடேசன் செயலர் ஆர்.தட்சனாமூர்த்தி, உறுப்பினர்கள் ஆர்.சங்கர், ஆர்.சத்தியகுமார், தொழிலதிபர் முருகேசன், சுகாதார ஆய்வாளர் கன்னியப்பன், உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் பலர்கலந்துகொண்டனர்.



தென்காசி மாவட்டம் செங்கோட்டை கொல்லம் ரோட்டில் 25 வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் சம்பா மகப்பேறு மருத்துவமனையில் டாக்டர். M. விஜயகோபாலன், டாக்டர்.N.சண்முக சுந்தரி, டாக்டர். V. தேவ் குமார், டாக்டர். C. தரன்யா அவர்கள் முன்னிலையில் சமத்துவ பொங்கல் விழா மற்றும் விளையாட்டு போட்டி விழா சிறப்பான முறையில்நடைபெற்றது மற்றும்மருத்துவமனைஊழியர்கள்நண்பர்கள்கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தோம்.



# தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக திராவிட பொங்கல் விளையாட்டு விழா அளவிலான மின்னொளி கபாடி போட்டி அமைச்சர் கீதாஜீவன் பரிசுகள் வழங்கினார்

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் தூய மரியன்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மின்னொளி கபடி போட்டி நடைபெற்றது.

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மாவட்ட, மண்டல அளவிலானபோட்டியில்பல்வேறு அணிகள் பங்கேற்றன.

வெற்றி பெற்ற அணிகளுக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் கோப்பை மற்றும் பரிசு தொகையை வழங்கினார்.

நிகழ்ச்சியில் விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கெண்டேயன், மாநகர தி.மு.க செயலாளர் ஆனந்தசேகரன், கலை இலக்கிய அணி ஜீவன் ஜேக்கப்,மாமன்ற உறுப்பினர் ராமகிருஷ்ணன், நிர்வாகி காசி விஸ்வநாதன், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மத்திய மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பாக மாவட்ட செயலாளர் எஸ்.டி.ஆர்.சாமுவேல்ராஜ் மற்றும் எஸ்.கிஷோர்தலைமையில், மத்திய மாவட்ட இணைச் செயலாளர்எம்.கோல்டன்முன்னிலையில்சமத்துவபொங்கல்விழாகொண்டாடப்பட்டது. இதில் மாவட்ட வர்தக அணி செயலாளர் தொழில் அதிபர் பி. எஸ். கே. மூர்த்தி மற்றும் தூத்துக்குடிமத்தியமாவட்டதமிழகவெற்றிக்கழகஉறுப்பினர்கள்பலர்கலந்துகொண்டனர்

# காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் கூட்டணி கட்சியுடன் இணைந்து சமத்துவ பொங்கல் விழா மாங்குடி எம்.எல்.ஏ. பங்கேற்பு



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்ற அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது ஐந்து பானைகளில் வைக்கப்பட்ட பொங்கல் பொங்கி வரும் பொழுது மகளிர் அணியினர் குளவையிட்டு பொங்கலோ பொங்கல் என்று சூரிய பகவானை வணங்கினர்..

அதனைத் தொடர்ந்து நாட்டிய குதிரை ஆட்டம் பெண்களுக்கு உறியடி போட்டி ,ஆண்களுக்கு உறியடி போட்டி, நடைபெற்றது. இதில் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர் மற்றும் கூட்டணி கட்சியான திமுகவின் நிர்வாகிகள். மாமன்ற உறுப்பினர்கள் உட்பட தொண்டர்கள் கலந்து கொண்டனர் அதன்பின்பு பங்கேற்ற அனைவருக்கும் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி பொங்கல் மற்றும் கரும்பு வழங்கினார்.

# கீழக்கோட்டையில் தேசிய இளைஞர் தின கொண்டாட்டம்



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சுற்றுச்சூழல் மன்றம் சார்பாக மகிழ் முற்ற மாணவ மாணவிகள் தேசிய இளைஞர் தினம் மற்றும் அயலகத் தமிழர் தினத்தை கொண்டாடினர். பள்ளியின் தலைமைஆசிரியை தெய்வானை தலைமை வகித்து மாறி வரும் உலகில் இளைஞரின் பங்கு பற்றி சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். பட்டதாரி ஆசிரியர் கீதாவரவேற்றார்.சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளான ஜனவரி 12 ஆம் தேதியை இந்திய அரசு 1984 ஆம் ஆண்டு தேசிய இளைஞர் தினமாக அறிவித்து 1985ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி ஒரு நாட்டின் எதிர்காலமே இளைஞர்கள் கையில் தான் உள்ளது. இளைஞர்களின் வளர்ச்சிக்கு ஏற்பதான் நாட்டின் வளர்ச்சியும்அமைகிறது என்ற சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளான ஜனவரி 12ஆம் தேதியை தேசிய இளைஞர் தினமாக கொண்டாடி வருகிறோம். ஒரு இளைஞன் தேசப்பற்று வீரம் ஒழுக்கம் மனிதநேய பண்புகள் தளர்ந்து போகாத நெஞ்சம் உத்வேகம் பெரியோர்கள் மீது அன்பு மற்றும் மரியாதை போன்றவற்றை கொண்டிருந்தால் அந்த நாடும் முன்னேறும் என்ற சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகளை உண்மையாக்க பாடுபடுவோம் என அவர் பிறந்த நாளில் உறுதிமொழி எடுப்போம் என்று அனைவரையும் கேட்டுக்கொண்டார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். கணினி பயிற்றுநர் வித்யாசத்துணவு உதவியாளர் அஞ்சலை சத்துணவு உதவி உதவியாளர் கஸ்தூரி காலை சிற்றுண்டி பொறுப்பாளர் பஞ்சவர்ணம் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக் குறிப்பு



ஈரோடு மாவட்டத்தில் எதிர்வரும் திருவள்ளுவர் தினம் (16.01.2026) மற்றும் குடியரசு தினம் (26.01.2026) ஆகிய தினங்கள் முழுவதும் முன்னிட்டு அரசு மதுபானக் கடைகள், அதனுடன் இயங்கும் மதுக்கூடங்கள் மற்றும் எப்.எல்.2/ எப்.எல்.3 மதுபான விடுதிகள்/ஹோட்டல்களில் உள்ள பார்கள் ஆகியவை மேற்கண்ட தினத்தில் மூடப்பட வேண்டும் எனவும்,அன்றைய தினத்தில் மது விற்பனை இல்லாத நாளாக (Dry Day) அனுசரிக்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து 16.01.2026 மற்றும் 26.01.2026 அன்று முழுவதும் ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு மதுபானக் கடைகள், அதனுடன் இயங்கும் மதுக்கூடங்கள் மற்றும் எப். எல்.2/எப்.எல்.3 மதுபான உரிமதலங்கள் மூடப்பட்டிருக்கும் என்றும் அன்றைய தினத்தில் மதுபான விற்பனைகள் ஏதும் நடைபெறாது என்றும், அன்றையதினம்மது விற்பனையில் ஈடுபடும்நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்என்றுமாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# தவெக கட்சி பொங்கல் வாழ்த்து பேனரை கிழித்த மர்ம நபர்கள்



தமிழக வெற்றிக் கழக திருப்பூர் கிழக்கு மாவட்டம் தாராபுரத்தில் திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் யுவராஜ் மகேஷ் மற்றும் வடக்கு நகர செயலாளர் எம்.பி ரமேஷ் அவர்களின் அறிவுறுத்தலின் அனைத்து வார்களிலும் பூத் கமிட்டி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது தமிழக வெற்றி கழக இணைந்து மக்கள் பணி செய்யமற்றும்தங்களைஉறுப்பினராகஇணைத்துக்கொள்ள மக்கள் ஆர்வம் காட்டுகிறார்கள் தமிழக வெற்றி கழகத்தில் புதிதாக இணையும் பொதுமக்களை ஒரு சில மாற்றுக் கட்சியினர் அவர்களை அச்சுறுத்துவதும் மிரட்டுவதும் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர் இது முக்கியமாக தாராபுரத்தில் உள்ள 8 வது வார்டு கொளஞ்சிவாடியில் தொடர்ந்து நடைபெறுகிறது அதுமட்டுமில்லாமல் கொளிஞ்சிவாடி 8 வது வார்டில் தமிழக வெற்றி கழகம் சார்பாக தாராபுரம் வடக்கில் நகர செயற்குழு உறுப்பினர் ரஜினிகுமார் அவர்களின் பொங்கல் வாழ்த்து பேனரை யாருக்கும் தெரியாமல் சில மர்ம நபர்கள் கிழித்துள்ளது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

# அச்சிறுபாக்கம் அரசு ஆரம்ப சுகாதர நிலைய மருத்துவமனையில் ஜன்னல் கண்ணாடியை உடைத்து திருட முயற்சி



செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுபாக்கம் ஒன்றியத்துக்கு உட்பட்டு, 59 ஊராட்சிகள் உள்ளன. இவற்றில், 1.50 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர்.

இவர்களின் மருத்துவ வசதிக்காக, அச்சிறுபாக்கத்தில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நாள்தோறும், நுாற்றுக்கணக்கான புறநோயாளிகள் வந்து செல்கின்றனர்.இதில், 30 படுக்கை வசதிகளுடன் கூடிய உள் நோயாளிகள் பிரிவு கட்டடம் செயல்பட்டு வருகிறது.

இந்த கட்டடத்தில் உள்ள கிச்சன் பகுதியில், நேற்று இரவு மர்ம நபர்கள், கட்டடத்தின் பின்புறம், ஜன்னல் கண்ணாடியை உடைத்து, மின்சார அடுப்பு மற்றும் பொருட்களை திருட முயன்றுள்ளனர்.

திருட்டு முயற்சி தோல்வி அடைந்ததால், டியூப் லைட்டை கழட்டி சென்றுள்ளனர்.

னவே, மருத்துவமனை உள் பகுதியியை கண்காணிக்கும் வகையில், இரவு நேர காவலாளி பணியமர்த்த வேண்டும் என, கோரிக்கை எழுந்துள்ளது.

அச்சிறுபாக்கம் மேம்படுத்தப்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, மருத்துவமனைக்கு சொந்தமான பொலிரோ ஜீப் வாகனத்தில் இருந்து, கடந்த சில தினங்களுக்கு முன் இரவு நேரத்தில், பேட்டரியை திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று, கிச்சன் பகுதியில் உள்ள பொருட்களை திருட முயன்று உள்ளனர்.

எனவே, மருத்துவமனை வளாகத்தை சுற்றி கண்காணிப்பு கேமரா பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.







பொங்கல் திருநாள், உழவர் திருநாள், திருவள்ளுவர் திருநாள், தமிழர் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் , தமிழ்நாடு துணை முதலமைச்சர் திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு மகளிர்களுக்கான திருவிழா புள்ளி கோலம் போட்டி, மருதாணி போடும் போட்டி, எம்ராய்டு போட்டி, ரங்கோலி ,காய்கனி வடிவமைப்பு போட்டி ஆகிய போட்டிகள் ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஈரோடு மாநகர் செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றி பெற்ற மகளிர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு. முத்துசாமி பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்செல்வராஜ், கழகமாநில, மாவட்ட, மாநகரநிர்வாகிகள், மாநகரக்கழகசெயலாளர் மு.சுப்பிரமணியம், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் செல்வராஜ் ,மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள்,பகுதிகழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் ,கழக சார்பு அணியினர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

## அலென் கேரியர் இன்ஸ்டிடியூட் சார்பாக மாணவர்களுக்கு பாராட்டு விழா

சோபன் என நடைபெற்ற விழாவில் பொறியியல், மருத்துவம் மற்றும் ஒலிம்பியாட் தேர்வுகளில் சிறந்த மதிப்பெண்கள் எடுத்த மாணவர்களுக்கு விரு-

பொறியியல் மற்றும் மருத்துவ நுழைவுத் தேர்வுகளில் சிறப்பாக சாதித்து முன்னணி தேசிய கல்வி நிறுவனங்களில் சேர்க்கைபெற்றகோயம்-

யல், மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் சேர்வதற்கான தேர்வுகளில் அகில இந்திய அளவில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவ,மாணவி-




துகள் வழங்கபட்டது.

அலென் கரியர் பயிற்சி நிறுவனம் மருத்துவ நிழைவு தேர்வான நீட் மற்றும் பொறியியல் துறை தேர்வான ஜே.இ.இ.உள்ளிட்ட முதன்மை தேர்வுகளை மாணவர்கள் எதிர் கொள்வதற்கு தேவையான பயிற்சிகளை வழங்கி வருகிறது..

குறிப்பாக கொங்கு மண்டல பகுதிகளான ஈரோடு, கரூர், சேலம், நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆலன் கோயம்புத்தூர் ஒரு சிறந்த வழிகாட்டுதல் தளத்தை வழங்கி வருகிறது ...

இந்நிலையில் அலென் கோவை கிளை சார்பாக தனது வருடாந்திர ஆண்டு விழாவான சோபன் எனும் மாணவர்களுக்கான பாராட்டு விழா கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள இந்துஸ்தான் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது ...

விழாவில் பொறியி-

புத்தூரின் சிறந்த மாணவர்களை கௌரவிக்கும் விழாவாக நடைபெற்ற இதில்,

சிறப்பு விருந்தினர்களாக சக்தி கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் தீபன் தங்கவேலு, பிருந்தாவன் வித்யாலயாவின் தாளாளர் மற்றும் முதல்வர் வனிதா திருமூர்த்தி, கோவை வித்யாஷ்ரமத்தின் தாளாளர் மற்றும் கல்வி இயக்குநர் டாக்டர் எஸ். பி. தேன்மொழி,ஏ.வி.ஜி. பள்ளியின் முதல்வர் சிவக்கொழுந்து, தி என். ஜி.பி. பள்ளியின் முதல்வர் பிரீதா, தி என்.ஜி.பி. பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் நடராஜ், பிருந்தாவன் பப்ளிக் பள்ளியின் துணை முதல்வர் முத்துக்குமாரி, மவுண்ட் லிட்டெரா ஜீ பள்ளியின் முதல்வர் வெங்கட் மற்றும் அத்வைத் தாட் அகாடமி ஒருங்கிணைப்பாளர் கவிதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

களுக்கு விருதுகள் வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இதில் மருத்துவ துறை உட்பட இந்தியாவின் முன்னனி கல்வி நிறுவனங்களில் சேர்க்கை அனுமதி பெற்ற மாணவர்கள் கவுரவிக்கப்பட்டனர்இந்த நிகழ்ச்சியில் முதன்மைவிருந்தினராக இந்திய வருவாய் சேவையைச் சேர்ந்த வருமான வரி ஆணையர் டாக்டர் ஏ. ஸ்ரீநிவாசன் கலந்துகொண்டுஅலென் பயிற்சி மையத்தின் சேவையை பாராட்டி சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்தார்.. நிகழ்ச்சியில், அலேன் தெற்கு மையங்களின் துணைத் தலைவர் மற்றும் வேதியியல் துறை ஆசிரியரான மகேஷ் யாதவ், அலேன் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மையங்களின் கல்வி தலைவர் மற்றும் கணித துறை ஆசிரியரான சந்தோஷ் சிங் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் ஆவின் பால் பண்ணை எதிரில் சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட பேருந்து பயணிகள் நிழல் கூடத்தை சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள் மற்றும் பாமக மூத்த முன்னோடிகள் கோபால்,ராமர் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



## கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள, ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் 50 ஆண்டு பொன்விழா நிகழ்ச்சி வரும் 15ந் தேதி கொடிசியாவில் நடைபெற உள்ளது

கோவை எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் ஆதரவில் இயங்கும் முன்னணி மருத்துவமனையான

ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை தனது 50 வது ஆண்டு பொன்விழாவையும், ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவமனை அதன் 25 வது ஆண்டு வெள்ளிவிழாவையும் வரும் ஜனவரி 15 ஆம் தேதி சிறப்பாக கொண்டாட உள்ளது. இதற்கான அறிவிப்பு மற்றும் செய்தியாளர் சந்திப்பு நிகழ்ச்சி கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் எஸ்.என். ஆர்., சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது எஸ்.என்.ஆர்., சன்ஸ் அறக்கட்டளை, கோவையில் 1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. குறைந்த செலவில் தரமான மருத்துவம் எனும் சீரிய நோக்கத்தோடு துவங்க பட்டு இன்றளவும் இயங்கி வருகின்றது

இந்த நிலையில் இதன் 50ம் ஆண்டு விழாவை கொண்டாடும் வகையில் ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவமனை 25 ஆண்டுகளை நிறைவு செய்கின்றது. இதனை விழாவாககொண்டாடும் வகையில்,கோவைஅவினாசி சாலையில் உள்ள கொடிசியாவர்த்தவளாகத்தில் வரும் ஜனவரி 15 ஆம் தேதி, மாலை 5 மணிக்கு கோலாகலமாகக் கொண்டாடபட உள்ளது. இதில்

இந்தியக் குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளதாக கூறினார். இந்த செய்தியாளர்கள் சந்திப்பின் பொழுது எஸ். என்.ஆர்., சன்ஸ் அறக்கட்டளை இணை நிர்வாக அறங்காவலர் நரேந்திரன் சௌந்திரராஜ், தலைமை நிர்வாக அதிகாரி டி. மகேஷ்குமார், ஸ்ரீ இராமகிருஷ்ணாமருத்துவமனை மருத்துவ இயக்குநர் டாக்டர் எஸ். அழகப்பன் ஆகியோர் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவை, ஸ்ரீ ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில் பொங்கல் விழா விமர்சையாக கொண்டாடப்பட்டது



கோவை துடியலூர் அருகே உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில் பொங்கல் விழா விமர்சையாக கொண்டாடப்பட்டது.

பொங்கல் வைத்து மாணவிகளுக்கு அம்மி அரைக்கும் போட்டி, கயிறு இழுக்கும்போட்டி, பானை உடைத்தல் உள்ளிட்ட போட்டிகள் நடத்தியும், பறை இசைத்தும் நடனமாடி கொண்டாடினர்.

கோவை துடியலூர் அருகே வட்டமலைப்பாளையத்தில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில் தைப்பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவினை கல்லூரி முதல்வர் டாக்டர் கோபாலகிருஷ்ணன் துவக்கி வைத்தார்.

இவ்விழாவில்மாணவ, மாணவியர் பாரம்பரிய உடை அணிந்து கல்லூரிக்கு வந்திருந்தனர். வண்ண கோலங்களால் அழகூட்டப்பட்ட மண் பானையில் பச்சரிசி இட்டு புத்தம் புதிய மண் அடுப்பில் விறகு வைத்து தீ மூட்டி பொங்கல் வைத்து, பொங்கல் பொங்கி வரும்போது பொங்கலோ பொங்கல் என்று கூறி இறைவனுக்கு படையலிட்டனர். தொடர்ந்துபசு மாட்டிற்கு பூஜைகள் செய்து மாட்டுப்பொங்கலையும் கொண்டாடினர்.

பின்னர் விழாவையொட்டி அம்மி அரைத்தல், உரிஅடித்தல், கயிறு இழுத்தல், சிலம்பம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன இப்போட்டிகளில்.வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பொங்கல் விழாகொண்டாட்டத்தில் மாணவ,மாணவியர் பறை இசைத்தும்,நடனம் ஆடி உற்சாகமுடன் கலந்துகொண்டனர். பொங்கல் விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் சக்கரைப் பொங்கல் பரிமாறப்பட்டது

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை விழா ஒருங்கிணைப்பாளர் கட்டிடவியல் துறைத்தலைவர் நிவேதிதா செய்திருந்தார்.

## மதுராந்தகம் அதிமுக நகர கழக சார்பில் சமத்துவ பொங்கல் விழா

### நகர கழக செயலாளர் பூக்கடை கே.சரவணன் தலைமையில் நடைபெற்றது



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் உள்ள அதிமுக நகர கழக செயலாளர் அலுவலகத்தில் அதிமுக சார்பில் சமத்துவ பொங்கல் விழா நிகழ்ச்சியை மதுராந்தகம் நகரகழகசெயலாளர்பூக்கடை கே .சி. சரவணன், மதுராந்தகம் நகர் அம்மா பேரவை செயலாளர் வழக்கறிஞர் எம்.பி சீனிவாசன்,ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம், மதுராந்தகம் அதிமுகசட்டமன்றஉறுப்பினர் மரகதம் குமரவேல் கலந்து கொண்டு புத்தம் புது பானையில் பச்சரிசி வெள்ளம் வைத்து பொங்கல் பொங்கி வரும் வேளையில் பொங்கலோ பொங்கல் என சமத்துவ பொங்கல் விழாவை வெகு விமர்சியாக கொண்டாடினர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டகழகநிர்வாகிகளுக்கு வேட்டி சேலை பொங்கலுக்கு தேவையான பச்சரிசி வெள்ளம் முந்திரி திராட்சை நெய் கரும்பு இவைகளை அடங்கிய பையை 500க்கும் மேற்பட்டகழகநிர்வாகிகளுக்கு வழங்கினர் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் பக்தவச்சலம், கழக மாநில வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் செல்ல பாண்டியன், கருங்குழி பேரூர் கழக செயலாளர் ஜெயராஜ், கருங்குழி முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் மஞ்சுளா புருஷோத்தமன், ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் புருஷோத்தமன், நகர அவைத்தலைவர் வேணு, துணைச் செயலாளர் முத்து,நகர்மன்ற கவுன்சிலர் ஜமீன் காதர் மொய்தீன், தேவி வரலட்சுமி, ,மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## தென்காசி மாவட்டம் ஆலங்குளத்திற்கும் சிறப்பு பேருந்து வசதி ஏற்பாடு செய்து தர வேண்டும் பொ.சிவ பத்மநாதன் கோரிக்கை



பொங்கல் திருநாளாம் தமிழர் திருநாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் தலைநகர் சென்னையில் வசித்து வருகிற மக்கள் தங்களது சொந்த ஊருக்கு செல்வதற்கு ஏதுவாக பொங்கல் திருநாளை முன்னிட்டு முன்னிட்டு பல்வேறு பகுதிகளுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பு பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்து கொடுத்து உள்ளீர்கள் அதேபோன்று தென்காசி மாவட்டம் ஆலங்குளத்திற்கும் சிறப்பு பேருந்து வசதி ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று பொதுமக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்

மேலும்ஆலங்குளம்வளர்ந்துவருகிறபெரியநகரம் ஆலங்குளத்தை சுற்றி நல்லூர் புதுப்பட்டி முக்கூடல் ரெட்டியார்பட்டி குருவன்கோட்டை குறிப்பன் குளம் கழுநீர் குளம் பட்டமுடையார் புரம் மருதமுத்தூர் புதுப்பட்டி காளத்தி மடம் கரும்பனூர் ஆண்டிபட்டி பூலாங்குளம்பெத்தநாடார்பட்டி போன்றகிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் வியாபாரம் வணிகம் போன்ற தொழில்கள் சென்னையில் செய்து வருகிறார்கள் அவர்கள் பொங்கலுக்கு ஊருக்கு வருவதற்கு வசதியாக ஆலங்குளத்திற்கு சிறப்பு பேருந்து வசதி செய்து கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும்

அதேபோல பொங்கல் கழித்து ஆலங்குளத்திலிருந்து திரும்ப சென்னைக்கு செல்வதற்கும் சிறப்பு பேருந்து வசதி ஏற்பாடு செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொங்கல் திருநாளை முன்னிட்டு சிறப்பு பேருந்து ஆலங்குளத்திற்கும் ஏற்பாடு செய்து தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்



சென்னை திருவள்ளூர் அருகே உள்ள கவரப்பட்டு பகுதியில் இருந்து தூத்துக்குடி காற்றாலைக்கு ஒரு ட்ரெய்லர் லாரியில் 83 டன் எடை கொண்ட காற்றாலை இயந்திரம் ஏற்றுக்கொண்டு சென்று கொண்டிருந்தது இந்த லாரியை முசிறியைச் சேர்ந்த அரவான் வயது 54 என்பவர் ஓட்டிச் சென்றார் இந்த ட்ரெய்லர் லாரி கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள டி.மாவிடந்தல் ஜிஎஸ்டி சாலையில் வந்து கொண்டிருந்த பொழுது ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி நடு ரோட்டில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது இதில் காற்றாலை இயந்திரம் ட்ரெய்லர் லாரியிலிருந்து கீழே விழுந்தது இதில் சென்னை திருச்சி நான்கு வழி சாலையில்உடைப்புஏற்பட்டதுமேலும்விபத்துக்குள்ளான வாகனம்நடு ரோட்டிலேயே இருந்ததால் சென்னைதிருச்சி நான்கு வழி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது இது பற்றி தகவல் அறிந்த எடைக்கல் போலீசார் மற்றும் உளுந்தூர்பேட்டை போக்குவரத்து போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து வாகனங்களை ஒரு வழி பாதையில் மாற்றி விட்டு போக்குவரத்தை சரி செய்தனர் இதனால் சென்னையிலிருந்து திருச்சி நோக்கி செல்ல வாகனங்கள் எதிர் திசையில் திருப்பி விடப்பட்டுள்ளது விபத்துக்குள்ளான ட்ரெய்லர் லாரி மற்றும் காற்றாலை இயந்திரம் ஆகியவற்றை சாலையில் இருந்து அப்புறப்படுத்த அதிநவீன இயந்திரங்கள் வரவழைக்கப்படுகிறது இந்த விபத்து குறித்து எடைக்கல் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்...

## அச்சிறுப்பாக்கம் எஸ் ஜே ஜே சரவணா ஸ்டோர் பொங்கல் பண்டிகை மெகா சிறப்பு தள்ளுபடி




செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் பஜார் வீதியில்அமைந்துள்ள எஸ்ஜேஜேசரவணாஸ்டோர் கடை இயங்கி வருகிறது இந்த கடையில் வீட்டுக்கு தேவையான அனைத்து விதமான பொருட்களும் இங்கு குறைந்த விலையிலும் சிறந்த முறையில் கெடுப்பதால் மக்கள் கடைக்கு நல்ல வரவேற்பளித்து வருகின்றன பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சரவணா ஸ்டோர் இந்த துணிக்கடையில் பல்வேறு தள்ளுபடிவிலைகளில்ஆடைகளும்அவர்களுக்கான குழுக்கள் முறையில்பரிசுகளும்திருமணமற்றும்சுப நிகழ்ச்சிகளுக்கு தேவையான அனைத்து பொருட்களும் மிக மிக குறைந்த விலைகளும் கைராசியாக உள்ளதாக பொதுமக்களிடையே இந்த கடைக்கு அதிக ஆதரவு அளித்து வருகின்றனர்.

# ஈரோடு மாவட்டத்தில் வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (12.01.2026) மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை. விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், விலையில்லா தையல் இயந்திரம், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 230 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

நேற்றைய தினம், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தொழிலாளர் நலத்துறையின் சார்பில், 1 நபர்களுக்கு விபத்து மரண நிவாரண நிதியுதவி தலா ரூ. 2,05,000/- அரசு மருத்துவ கல்லூரிகளில் மருத்துவ பயிலும் 3 6 5.4,05,000/- பயனாளிகளுக்கு ரூ.2,00,000/- கல்வி உதவித்தொகையும் அந்தியூர், முனியம்பாளையம் பகுதியில் மீட்கப்பட்ட 6 கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு ரூ.8,80,000/- தனியார் நிறுவனத்தில் குழந்தை தொழிலாளியாக பணியாற்றிய 1 நபருக்கு ரூ.45,000/- என மொத்தம் ரூ. ரூ.13,30,000/- மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில்,தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், தொழிலாளர் உதவி ஆணையர் ஜெயலட்சுமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முரளி உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு கலை மற்றும் அறிவியியல் கல்லூரிகளை சேர்ந்த 1352 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள்





## அமைச்சர் முத்துசாமி வழங்கினார்

ஈரோடு மாவட்டம். சென்னிமலை ரோடு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அரசினர் தொழில்பயிற்சி நிலையம் மற்றும் ரங்கம்பாளையம், ஈரோடு கலை மற்றும் அறிவியியல் கல்லூரி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற விழாவில் நேற்று (12.01.2026) வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் 1352 கல்லூரி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார்.

வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் பேசும்போது தெரிவித்தாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிபொறுப்பேற்ற பிறகு மாணவ, மாணவியர்களின் நலனுக்காக பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டினை முன் மாதிரி மாநிலமாக உயர்த்தி உள்ளார்கள். அந்த வகையில் உலகம் உங்கள் கையில் திட்டத்தில் கீழ் 10 லட்சம் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தை 08.01.2026 அன்று சென்னையில் துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படுகிறது. இம்மடிக்கணினியானது அவர்களின் கல்விக்கு பயன்படும் வகையில் இருக்கும்.மேலும் உயர்கல்வி செல்லும் மாணவ மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள் என தெரிவித்தார்.

நேற்றைய தினம், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் ஈரோடு மாவட்டத்திற்கு மடிக்கணினிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் அரசினர் தொழில்பயிற்சி நிலையத்தில் இறுதி ஆண்டு பயிலும் 307 மாணவ மாணவியர்களுக்கும், ஈரோடு கலை மற்றும் அறிவியியல் கல்லூரி இறுதி ஆண்டு பயிலும் 1045 என மொத்தம் 1352 விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார்.

முன்னதாக, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் அரசினர்தொழில்பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு கபாடி, டென்னிஸ், போட்டிகளை துவக்கி வைத்து. விளையாட்டு போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர் சு. நாகரத்தினம் சுப்பிரமணியம், அரசினர் தொழில்பயிற்சி நிலைய முதல்வர் சீனிவாசன். ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் சங்கர சுப்பிரமணியன், உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி அருகே ரெயில் முன் பாய்ந்து என்ஜினீயர் தற்கொலை



கன்னியாகுமரியை அடுத்த அகஸ்தீஸ்வரம் ரெயில்வே கேட் அருகே உள்ள தண்டவாளத்தில் நேற்றுமுன்தினம் காயங்களுடன் ஒரு ஆண்பிணம்கிடந்தது. இதுகுறித்து நாகர்கோவில் ரெயில்வே போலீசுக்கு தகவல் தெரிவிக்கப் பட்டது. உடனே போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர்.

அப்போது பிணமாக கிடந்தவர் அணிந்திருந்த சட்டை

பையில் சோதனை செய்தபோது, ஆதார்கார்டு இருந்தது.அதில் இருந்த அவரது முகவரியை வைத்து விசாரித்ததில் அடையாளம் தெரிந்தது.

2 நாட்களுக்கு முன்பு மாயமானவர்

பிணமாக கிடந்தவர் மேல்மிடாலம் ஆலுவிளை பகுதியை சேர்ந்த பிரின்ஸ் யார்டிலி (வயது 47) என்பது தெரியவந்தது. பின்னர் இதுகுறித்து பிரின்ஸ் யார்டிலியின் உறவினர் களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும் போலீசார் நடத்திய விசாரணையில், என்ஜி னீயரான பிரின்ஸ் யார்டிலி சென்னையில் உள்ள ஒரு ஐ.டி. நிறுவனத்தில் பணியாற்றியி ருந்தார்.பிறகு மேல்மிடாலம் பகுதியில் கணினிமையம் ஒன்று நடத்திவந்துள்ளார்.அவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் 16 வயதில் ஒரு மகன் உள்ளனர்.

மேலும் அவர் கடைக்கு சரியாக செல்லாமல் இருந்துள்ளார். இந்தநிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு பிரின்ஸ் யார்டிலி வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளார். ஆனால் அதன் பிறகு அவர் வீடு திரும்பவில்லை. இந்தநிலையில் தான் அவர் தண்டவாளத்தில் பிணமாக கிடந்தத தெரிய வந்துள்ளது.

உடல் ஒப்படைப்பு

அதாவது, பிரின்ஸ் யார்டிலி நேற்றுமுன்தினம் அகஸ்தீஸ்வரம் பகுதியில் உள்ள ரெயில்வே கேட் பகுதிக்கு வந்துள்ளார். அப்போது அந்த வழியாக வந்த ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டதாக போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது. மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து அவரது சாவுக்கு வேறு ஏதே னும் காரணமா? எனவும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் உடலை போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பிரேத பரிசோதனை முடிந்து நேற்று உடல் அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. வீட்டை விட்டு வெளியே சென்ற என்ஜினீயர் ரெயில் முன்பாய்ந்து தற்கொலை செய்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

# தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல் உத்தரவு, வரன்முறைப்படுத்தி பட்டா, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு வேண்டி, தொழில் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 257 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு துறைசார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்கள்.

முன்னதாக, மாற்றுத்திறனாளிகளை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 18 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு அவர்களின் கோரிக்கைகளை கனிவுடன் கேட்டறிந்தார்.

அதனைத்தொடர்ந்து, நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைகளையும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகள் சார்பில் Children Charitable Trust தொண்டு நிறுவனம் மூலம் 70 அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கான கல்வி உபகரணங்களை அங்கன்வாடி பணியாளர்களிடம் வழங்கினார். மேலும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 04 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு செயற்கை அவயங்களை மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் ஆ. இரவிச்சந்திரன்,மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தில்வேல் முருகன்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) உலகநாதன்,திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் காயத்திரி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் பிரமநாயகம் மற்றும் அனைத்துத்துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (12.01.2026) ஈரோடு மாவட்டம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு நடைபெற்ற கபாடி விளையாட்டுப்போட்டியினை தொடங்கி வைத்து, பார்வையிட்டார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், முதல்வர் (அரசு தொழிற்பயிற்சி நிலையம்) மு.சீனிவாசன் உட்பட பலர் உள்ளனர்.

# பொங்கல் கலைவிழா 2026 கலை நிகழ்ச்சிகள் 15,16 ஆகிய இரு நாட்கள் நடைபெற உள்ளது

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்





தமிழகத்தின் பாரம்பரிய பெருவிழாவாகத் திகழும் தைத் திருநாள் பொங்கலை சிறப்பிக்கும் வகையில் பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடி மகிழ்ந்து கொண்டாடும் நோக்குடன் தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத்துறையால் சென்னையில் -சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா நடத்தப்படுவது போன்று ஏனைய 37 மாவட்டங்களில் பொங்கல் கலை விழா நடத்தப்படுகிறது.

பொங்கல் பண்டிகையின் உண்மையான பண்பாட்டுச் சிறப்புகளை இளைய தலைமுறைக்கு அறிமுகம் படுத்துவதோடு பொங்கல் விடுமுறையை மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கொண்டாட பொதுமக்களை ஈர்க்கும் வகையில் இந்த விழா வடிவமைக்கப்பட்டுள்ளது. கிராமிய வாழ்வியல், விவசாய மரபு, பாரம்பரிய உணவுகள் மற்றும் பழக்க வழக்கங்களை நினைவூட்டும் வகையில் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கலைபண்பாட்டுத்துறை,கோயம்புத்தூர்,மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக, ஈரோடு மாவட்டத்தில் 15.01.2026 அன்று பெரியார் நகர் 80 அடி சாலை இடத்தில் மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரையிலும், 16.01.2026 அன்று வ. உ. சி பூங்கா விளையாட்டு திடலில் மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரையிலும், பொங்கல் கலைவிழா கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் தெருக்கூத்து நாடகம்,கடவுமத்தளம், தோல் பாவைக்கூத்து, சிலம்பம், தப்பாட்டம். நையாண்டி மேளம், நாடகம் மற்றும் பரத நாட்டியம் போன்ற பல்வேறு கலை வடிவங்களில் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட உள்ளது.

பொங்கல் கலை விழா குடும்பத்துடன் கூடி பாரம்பரிய கலைகளை ரசித்து மகிழ பண்பாட்டை போற்றி சமூக ஒற்றுமையை வளர்க்கும் ஒரு மேடையாக அமையும்.

தமிழர் பண்பாட்டின் அடையாளமாக பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடனும் உற்சாகமாகக் கொண்டாடி இந்தக் கலைவிழாவிற்கு வருகை தந்து கண்டு களிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# ஈரோடு மாநகராட்சி வ.உ.சி. விளையாட்டு அரங்கத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட நவீன உடற்பயிற்சி கூடத்தினை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்தார்

ஈரோடு மாநகராட்சி வ.உ.சி பூங்கா விளையாட்டு அரங்கத்தில் வீட்டுவசதி, மதுவிலக்கு



மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (11.01.2026) ரூபாய்.60 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட நவீன உடற்பயிற்சி கூடத்தினை திறந்து வைத்தார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில், அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்களில் உள்ள உடற்பயிற்சிக் கூடங்கள் குளிர்சாதன வசதிகளுடன் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என மானிய கோரிக்கையில் ஒரு பகுதியாக அறிவித்துயிருந்தார்கள். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வ.உ.சி. பூங்கா விளையாட்டு அரங்கத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சி கூடம் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தற்போது பல்வேறு வகையான உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் குளிர்சாதன வசதி ஏற்படுத்தப்பட்டு தமிழ்நாடு வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ்,ஈரோடு கிழக்குசட்டமன்றஉறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் சதிஷ்குமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் நேற்று (12.1.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.



★கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள பாலி கிராமத்தில் சென்னை திருச்சி நான்கு வழி சாலையின் ஓரமாக தமிழ்நாடு சிறப்பு காவல் படை பத்தாம் அணி செயல்பட்டு வருகிறது சுமார் 500க்கும் மேற்பட்ட காவலர்கள் பயிற்சி பெற்று வரும் நிலையில் அங்கு என்று பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விளையாட்டு போட்டி நடைபெற்றதுதலைமைகவாய்முருகேசன்தலைமையில்தொடங்கப்பட்டவிளையாட்டுப் போட்டிகளில் ஆண் பெண் காவலர்கள் கலந்து கொண்டனர் கபடி ஓட்டப்பந்தயம் குண்டு எறிதல் கைப்பந்து கயிறு இழுத்தல் என பல்வேறு போட்டிகளில் காவலர்கள் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.